தமிழை வாசிப்போம்! நேசிப்போம்! சுவாசிப்போம்!


குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்

Kurinji Muthamizh Sangam

# நிகழினி இதழ்

## NIGAZHINI MAGAZINE

ஆசிரியர் : சந்திரா ஸ்ரீதர் பதிப்பு : 6/2024/3






**Editor : Mrs.Chandra Srithar**
**ஆசிரியர் :திருமதி. சந்திரா ஸ்ரீதர்**

ஆசிரியர் இலாகா விளம்பரம் முகவரி
5252 E 130th circle
Thornton
Colorado 80241,USA.
chandra.srithar01@gmail.com

**Co-editor : Master. Suryha Venkataramani**
**இணை ஆசிரியர்:**
**செல்வன். சூரியா வெங்கட்ரமணி**

**குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்**, "நிகழினி இதழ்" தமிழ் சமூகத்திற்காக டிஜிட்டல் வடிவில் வெளியிடுவதில் பெருமை அடைகிறது.

நிகழினி என்றால் மங்கா அறிவொளி பொருந்தியவள், பிரகாசமாக சொலிப்பவள் என்று பொருள்.

இந்த இதழ் தொன்மையான நம் தமிழ்மொழியை நேசிக்கும் மக்களின் சுயப்படைப்புகள் மற்றும் நிர்வகிக்கப்பட்ட படைப்புகளை உங்கள் வாசிப்புக்காகக் கொண்டு வரும்.

இந்த இதழில் நிர்வகிக்கப்பட்டப் படைப்புகள் அனைத்தும் வாசகர்கள் நல்லத் தமிழ் படிக்கும் நோக்கத்தில் இடம் பெறுகின்றன.

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அதை எழுதியவர்களின் சொந்தக் கருத்துகளே!

எந்தவொரு நகல் உரிமைச் சிக்கலுக்கும் உண்மைத்தன்மைக்கும் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் பொறுப்பல்ல.

# ஆசிரியர் பக்கம்

நிகழினி நிரந்தரம்!

இந்த இதழில் உங்கள் பங்களிப்பை வரவேற்கிறோம்.
மகிழ்ச்சியாக வாசியுங்கள்!

ஏமாற்றங்கள் தரும் எதிர்பார்ப்புகளுக்கு
எண்ணற்ற நேரம் செலவிடுவதைத் தவிர்த்து,
உயர்வைத் தரும் உன்னதமான வேலைக்கு
உரிமைக் கொடு வெற்றி உனதே!

கற்றல் என்பது, கல்வியில் ஒருவகை
படித்தல் என்பது, சொல் வளத்தின் மறுமுகம்
எழுதுதல் என்பது, ஏனைய அனைத்திற்கும் ஏணிப்படி!
எடுத்துக்காட்டு,
வள்ளுவரின் திருக்குறள் அவர் எழுதியதால் மட்டுமே,
இன்றும் உலகப் பொதுமறையாகத் திகழ்கிறது.
எனவே, வருங்காலத் தலைமுறைகளின்
எழுதும் திறனை, ஊக்குவிக்கும் வகையில்
அவர்களின் எழுத்துக்களை வெளியிடுவதில்
நிகழினி நிர்வாகம் பெருமைக் கொள்கிறது



இங்ஙனம்
**திருமதி.சந்திரா ஸ்ரீதர்**
ஆசிரியர்






இணை ஆசிரியர்:
**செல்வன். சூரியா வெங்கட்ரமணி**

# திருக்குறள் அறிவோம்



அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

பொருள் : நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்றுகின்றவனுடைய வீட்டில் மனமகிழ்ந்து திருமகள் வாழ்வாள்.

The goddess of wealth will gladly rest
Where smiles welcome the worthy guest

**திருக்குறள் எண்** : 84
**பால்** : **அறத்துப்பால்**
**அதிகாரம்** : **விருந்தோம்பல்**






# திருமதி . ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்



மக்களாய்ப் பிறந்தவர் மக்கட் பண்போடு வாழ வேண்டும். அந்த மக்கட் பண்பு தான் மனிதனை ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. அத்தகைய மக்கட் பண்புகளுள் ஒன்று சான்றாண்மை .

சான்றாண்மை என்றால் என்ன?

" சாவது எளிது அரிது சான்றாண்மை " என்கிறது ஏலாதி . ஈகை , விருந்தோம்பல், நட்பு போன்ற அனைத்து நற்பண்புகளுக்கும் அடிப்படைக் காரணமாக அமைவது கல்வி ஒன்றேயாகும். அந்தக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குபவரையே சான்றோர் என்பர்.

"வேழ முடைத்து மலைநாடு
மேதக்க
சோழ வளநாடு
சோறுடைத்து– பூழியர்கோன் தென்னாடு
முத்துடைத்து தெண்ணீர் வயல்தொண்டை நன்னாடு
சான்றோர் உடைத்து "
( ஔவையார் )

தமிழகத்தின் வளங்களில் நிலவளம் நெல்;
மலைவளம் யானை ;
கடல் வளம் முத்து;
மக்கள் வளம் சான்றோர்.

சான்றோர் என்னும் சொல் " சால் " என்னும் அடிச்சொல்லில் இருந்தே தோன்றிய தெனலாம் . சாலுதல் என்றால் நிறைதல் என்பது பொருள் . சால என்ற உரிச்சொல் மிகுதி என்ற பொருள் தரும் . சால்பு என்றால் நிறைவுடைமை என்பது பொருள். எனவே சான்றோர் என்றால் எல்லா நற்பண்புகளும் நிறைந்தவர்கள் எனப் பொருள் கொள்ளலாம் .

" சான்றாண்மை என்ற சொல் தமிழ் மொழி ஒன்றுக்கே உரியது .சான்றாண்மைத் தன்மை தமிழ் மக்களின் கலை ; சான்றாண்மைப் பண்பு தமிழகத்தின் தனிப்பட்ட சொத்து . சான்றாண்மை என்ற சொல்லைப் பிற மொழிகளில் மொழி பெயர்க்கக் கூட முடியாது . மொழி பெயர்த்துக் கூறினாலும் அச்சொல்லில் தமிழ் கூறும் பொருள் இராது ." என்பது முத்தமிழ்க் காவலர் கி . ஆ . பெ . விசுவநாதம் அவர்களுடைய முடிவான கருத்து .

ஆண்மை என்ற சொல்லுக்கு ஆளும் தன்மை என்பது பொருள் .
வாளை ஆள்வது வாளாண்மை.
தாளை ஆள்வது தாளாண்மை.
வேளை ( மண்ணை ) ஆள்வது வேளாண்மை .
தன்னை ஆள்வது சான்றாண்மை .
பலராலும் போற்றப்படும் நற்குணங்கள் எதுவும் தன்னைவிட்டுப் பிரிந்து போய்விடாமல் அடக்கி ஆண்டு வருபவர் சான்றாண்மை உடையவர். சான்றாண்மை உள்ளவர் சான்றோர் எனப்படுவர். சான்றோர் எனப்படுபவரே உயர்ந்தோர் எனப்படுவர். அப்படிப்பட்ட உயர்ந்தோரையே உலகம் என்று சிறப்பிக்கின்றன இலக்கியங்கள் .
" உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே" ( தொல்காப்பியம் )

சான்றாண்மையைச் சிறப்பிக்காத அறநூல்களே இல்லை எனலாம்.
"தோல்வற்றிச் சாயினும் சான்றாண்மை குன்றாதே " (நல்லாதனார்--- திரிகடுகம்)
" நல்ல மகனாய்ப் பிறந்தும் சும்மா திரியாதே; சான்றோன் எனத் திரி " ( ஔவையார்)
" நான் வாழும் ஊரில் சான்றோர் பலர் வாழ்வதனாலேயே என் தலையில் நரையில்லை " (புறநானூறு --- பிசிராந்தையார்)

சான்றாண்மைப் பண்புகள்:

சான்றாண்மைக்குப் பல நற்குணங்கள் வேண்டும். அவற்றுள்ளும் சிறப்பாக இருக்க வேண்டியவை ஐந்து என்று திருக்குறள் வரையறுக்கிறது.

" அன்புநாண் ஒப்புறவு
கண்ணோட்டம்
வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்" . ( குறள் 983 )

அனைவரிடத்தும் அன்பாய் இருத்தல், பழி பாவங்களுக்கு அஞ்சி வாழ்தல், எல்லோரையும் உறவாய்க் கொள்ளுதல், எளியவர்க்கு உதவுதல், எப்போதும் உண்மையே பேசுதல் ஆகிய இந்த ஐந்து பண்புகளையும் சான்றாண்மை என்ற கட்டிடத்தைத் தாங்கும் தூண்கள் என்பார் வள்ளுவப் பெருந்தகை .

இந்த ஐந்து குணங்களையும் பின்பற்ற முடியாவிட்டாலும் உயிர்களைக் கொல்லாமை, பிறர் தீமை சொல்லாமை ஆகிய இரு குணங்களையாவது கடைப்பிடிக்க வேண்டுகிறார் வள்ளுவர்.

பிறர் தீமை சொல்லாமை ஆகிய இரு குணங்களையாவது கடைப்பிடிக்க வேண்டுகிறார் வள்ளுவர்.

" கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு." ( குறள் 984 )

இந்த இரண்டையும் கூடச் செய்ய முடியாது என்று நினைப்பவர்கள் ஒன்றே ஒன்றை மட்டும் செய்யுமாறு சலுகை காட்டுகிறது. அது தான் " தனக்குத் தீமை செய்தவனுக்கும் நன்மை செய்துவிடு " என்பது .

" இன்னா செய்தார்க்கும்
இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு ? " ( குறள் 987 )

சங்க இலக்கியங்களில் சான்றாண்மை:

சங்க இலக்கியங்களில் சான்றான் என்ற சொல் வீரன் , அறங்களைப் போற்றுபவன் என்ற இரு பொருள்களில் ஆளப்பட்டுள்ளது . அகநானூற்றுப் பாடல் ஒன்று சான்றோரின் குணங்களைப் பெரியோர் ஒழுக்கம் என்று போற்றுகிறது.

" விழையா உள்ளம்
விழையும் ஆயினும்
என்றும் கேட்டவை
தோட்டியாக மீட்டுஆங்கு
அறனும் பொருளும்
வழாமை நாடி
தன்தகவு உடைமை நோக்கி
மற்றதன்
பின்ஆ கும்மே முன்னியது
முடித்தல்
அனைய பெரியோர்
ஒழுக்கம் "
(அகநானூறு 286 )

பெரியோரின் உள்ளம் எப்பொழுதேனும் தீயன வற்றை விரும்பினாலும், அறம் என்னும் அங்குசத்தைக் கொண்டு, ஐம்பொறிகளாகிய யானையை அடக்குவர். அறத்தையும் பொருளையும் தக்க வழிகளில் நாடித் தமக்கு வேண்டியவற்றை முறையாகத் தேடிக் கொள்வர். தீநெறிகளை விலக்கி நன்னெறிகளைப் பின்பற்றுவர். அவர்கள் நினைத்ததைச் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர்கள். இதுவே
சான்றாண்மை பற்றி அகநானூற்றுப் பாடல் உணர்த்தும் செய்தி .

விருப்பு வெறுப்பின்றித் துலாக்கோல் போல் நடுவுநிலைமை தவறாமல் அறநூல் கூறும் கருத்துகளை எடுத்துக் கூறும் சான்றோர்கள் மதுரை நகரில் வாழ்ந்தனர் என்று பின்வரும் மதுரைக் காஞ்சி வரிகள் எடுத்துரைக்கின்றன.

"செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகி
சிறந்த கொள்கை அறம்கூறு அவையம் "
( மதுரைக் காஞ்சி 490 — 492 )

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் ." ( குறள் 69 )
இக்குறளில் வரும்
"சான்றோன் " என்ற சொல்லுக்குப் பரிமேலழகரும் "கல்வி கேள்விகளால் அறிவு நிறைந்தவன்" என்றே பொருள் கூறுகிறார்.

சங்க இலக்கியங்களில் சான்றோன் என்ற சொல் கல்வி கேள்விகளில் சிறந்த நூலறிவு உடையோரை மட்டும் அல்லாமல் போர்க்களத்தில் அறம் வழுவாது போரிட்ட வீரனையும் குறித்து வந்துள்ளது .

" ஈன்று புறந்தருதல்
என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல்
தந்தைக்குக் கடனே
"(புறநானூறு 312)

என்ற சங்க காலப் பெண்பாற் புலவர் பொன்முடியார் பாடிய பாடலில் வீரனாய் ஆக்குதல் தந்தையின் கடமை என்றே பொருள் பட்டிருக்க வேண்டும். ஏனெனில் சங்க காலத்தில் வீரத்தையே ஆணுக்கான முக்கியத் தகுதியாகக் கருதினர்.

போர்க் காலங்களில் வீட்டுக்கு ஓர் ஆண்மகன் போரில் பங்கேற்க வேண்டுமென்பது விதியாக இருந்தது. முரட்டுக் காளையை அடக்கும் காளையரையே கன்னியர் மணம் முடிக்க விரும்பினர்.

தன் மகன் போரில் புறமுதுகிட்டான் என யாரோ சொல்லக் கேட்ட தாய் ஒருத்தி தன் மகன் போரிட்ட போர்க் களத்திற்கே சென்று , அவன் மார்பில் புண்பட்டு வீர மரணம் அடைந்திருந்ததைக் கண்டதும் அத்தாய் அவனை ஈன்ற பொழுதினும் மிக்க மகிழ்ச்சி அடைந்தாள் என்று ஒரு புறப் பாடல் சொல்கிறது.

"சிதைந்து வேறாகிய படுமகன்
கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும்
பெரிதுஉவந் தனளே."
( புறநானூறு 278 )

" வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறுஎறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே. " ( புறநானூறு 277 )

பண்டைக் காலத்தில் போர்களை நிகழ்த்தும்போது கூட அறம் சார்ந்த சான்றாண்மைப் பண்புகள் கடைப்பிடிக்கப் பட்டன. போர் பற்றிய முரசு அறிவிக்கும்போது, " ஆவும், அந்தணரும், பெண்டிரும், பிணியால் வருந்துபவரும், புதல்வரைப் பெறாதவரும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுமாறு எச்சரிக்கை விடப்பட்டது . இது போரின் அறத்தாறு எனக் குறிப்பிடப்பட்டது.

"ஆவும் ஆனியல் பார்ப்பன
மாக்களும்
பெண்டிரும் பிணியுடை
யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு
அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்
பெறாதீரும்
எம்அம்பு கடிவிடுதும்
நும்அரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை "

என்பது நெட்டிமையார் என்ற புலவர் அறப்போர் பற்றிப் பாடிய புறப்பாடல்.

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்ற மன்னன் எழுதிய புறப்பாடல் ஒன்று சான்றோர் என்பவர் எப்படி இருப்பார் ? அவர் இயல்புகள் என்னென்ன என்பதைத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது .

" உண்டா லம்மஇவ் வுலகம்
இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும்,
இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே ;
முனிவிலர் ;
துஞ்சலும் இலர்;பிறர்
அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிரும்
கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும்
கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய
ராகித்
தமக்கென முயலா
நோன்தாள்
பிறர்க்கென முயலுநர்
உண்மையானே ."
(புறநானூறு 182).

" தமக்கு அமிழ்தமே கிடைத்தாலும் அதைத் தான் மட்டும் தனித்து உண்ணாமல், பிறர்க்கும் பகிர்ந்தளித்து உண்ணுவர். பிறர் செய்ய அஞ்சுகின்ற செயல்களைச் செய்யத் தாமும் அஞ்சுவர். புகழ் வரும் என்றால் அதற்காகத் தம் இன்னுயிரையும் கொடுக்கத் தயங்க மாட்டார். உலகமே கிடைப்பதானாலும் பழிக்குரிய செயல்களைச் செய்ய மாட்டார் . சுயநலமின்றிப் பிறர்க்காக வாழ்பவர் "என இவை யெல்லாம் சான்றோர்களின் இயல்பாக அப்புறப்பாடல் சித்தரிக்கின்றது .

சான்றாண்மைப் பண்பு
சாலவும் நன்று ;
உலகம் இயங்க உறுதுணை
செய்வது .

## திரு. சுகுமாறன் மாரியப்பன்



1. எத்தனை முறை கேட்டாலும் திகட்டாத பாடல் எது?

நாட்டுப்பண்ணும்! தமிழ்த்தாய் வாழ்த்தும்!

2. எது சிறந்த உதவி?

செய்த உதவியை மற்றவர்களுக்குச் சொல்லாமல் இருப்பது!

3. நமக்கு நாமே எதிரியாவது எப்போது?

உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிவிடும்போது! நாம் செய்த நல்ல செயல்கள் எல்லாம் காற்றில் பறந்து போய்விடுகின்றன. அப்போது நமக்கு நாமே எதிரியாகி விடுகிறோம்.

4. மனிதன் எப்போது ஞானம் அடைகிறான்?

தான் ஒன்றுமில்லை என்று உணர்கிற போது!

5. குழந்தைகள் வளர்ப்பில் உள்ள இன்றைய பிரச்சினைகள் என்ன?

இன்றுள்ள குழந்தைகள் எந்த வரிசையிலும் காத்திருப்பதற்காகப் பழக்கப்படவில்லை. அனைத்தையுமே ஆன்லைன் மூலம் பெற்றுவிடுகிறார்கள். எனவே அவர்கள் ஏமாற்றுத்துக்குப் பழக்கப்படாமல் வாழ்கிறார்கள்.
ஒரு சின்னத் தோல்வி ஏற்பட்டாலும் அவர்களால் தாங்கிக்கொள்ள இயலவில்லை...

6. நன்றாகப் பேச எதைக் கற்றுக்கொள்ள வேண்டும்?

மௌனத்தை...

7. அன்பு முக்கியமா... அறம் முக்கியமா?

அறத்துக்கும் அன்பே ஆதாரம்!

8. நண்பர்களுக்கும்... சந்தர்ப்பவாதிகளுக்கும் என்ன வேறுபாடு?

நெருக்கடி வந்தால் அதை உதவி செய்யும் சந்தர்ப்பமாகக் கருதுபவர்கள் நண்பர்கள். விட்டுவிட்டு ஓடுபவர்கள் சந்தர்ப்பவாதிகள்.

9. புறம் சொல்பவர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

புறம் சொல்வது சிலருக்குப் பொழுதுபோக்கு.

ஆற்றில் குளித்து முடித்துவிட்டு வந்த யானை ஒன்று, அழுக்கில் புரண்டு வந்த பன்றியைப் பார்த்ததும் ஓரமாக ஒதுங்கிச் சென்றது.
உடனே பன்றி, 'இவ்வளவு பெரிய உருவத்தோடு இருந்தாலும்... என்னைப் பார்த்து பயந்துவிட்டாயே!' என்று பரிகசித்தது.
அதற்கு யானை, 'நீ மோதினால் மறுபடி குளிக்க வேண்டுமே என யோசிக்கிறேன். உன்னை ஒரே மிதியில் என்னால் துவம்சம் செய்ய முடியும்!' என்று சொன்னது.
புறம் சொல்பவர்களிடம் அந்த யானையைப் போல் நாம் நடந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பன்றிகளின் சேறு நம் உடலெல்லாம் ஒட்டிக் கொள்ளும்.

10. சோம்பலின் உச்சம் எது?

கையில் இருக்கும் மிட்டாயை வாயில் போடக் கொட்டாவி(சோம்பலின் உச்சம்) வருவதற்காகக் காத்திருப்பது.

11. ஒருவரை புண்படுத்தாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

சில உண்மைகளைப் பேசாமல் இருந்தால் போதும்!

12. துன்பம் வரும்போது சிரிக்க முடியுமா?

பலருக்கும் முடியும்... அடுத்தவர்களுக்கு வரும்போது!

13. தகுதியற்றவர்களும் புகழ் பெறக் காரணம் என்ன?

தகுதியற்றவர்களை ஆர்வப்பட்டு தூக்கிப் பிடிப்பதாலும், தரம் பிரிக்கத் தெரியாதவர்களை அவசரப்பட்டு முன்மொழிவதாலும் இது போன்ற விபத்துக்கள் நிகழ்வதுண்டு. ஆனால் அது புகழ் அல்ல. பிரபலம் மட்டுமே! வளரும்போது வாத்துக்களுக்கும் அன்னத்துக்குமான வேறுபாடு வெளியில் தெரிந்துவிடும். கண்கள் சொல்லாததைக் காலம் சொல்லிவிடும்.

14. திருமணம் வெற்றியடைய என்ன செய்ய வேண்டும்?

கணவனும் மனைவியும் நண்பர்களைப் போல பழக வேண்டும். ஒரே ரசனையை உள்ளவர்களைவிட ... அடுத்தவர் ரசனையை மதிக்கத் தெரிந்தவர்களே மிக நல்ல இணையர்கள்.

15. எது அழகு?

செயற்கை ஒப்பனைகளின்றி இயல்பாக இருப்பதே அழகு!

16. பிரபலமானவர்களைப் பற்றி ஏன் வதந்திகள் அதிகமாக உருவாகின்றன?

பிரபலமானவர்கள் மீது மக்களின் இதயத்தில் ஒரு சின்ன பொறாமை இருக்கிறது. அவர்களைப் போல நாமும் பலருக்குத் தெரியவில்லையே என்கிற வருத்தம் மேலிடுகிறது. அவர்களுக்கு அவதூறு நேர்ந்தால்... தாங்கள் அவர்களைவிடப் புனிதமானவர்கள் என்பதைப் போன்ற எண்ணமும் சமாதானமும் ஏற்படுகிறது. அந்தப் பரபரப்பை வைத்தே வதந்திகளைப் பரப்புகிறவர்கள் இயங்குகிறார்கள்.

17. எந்தப் பஞ்சம் கொடியது?

இயற்கை தவறுவதால் ஏற்படும் பஞ்சத்தை விட... இருப்பவர்கள் பதுக்குவதால் உண்டாகும் பஞ்சம் கொடியது.

18. யாருடைய மரணம் அழகு?

இறந்த பிறகும் வாழ்பவர்களின் மரணம்!

19. எப்போது தவறுகள் மறைகின்றன?

அவற்றை மனதார ஒத்துக்கொள்ளும் போது!

20. கோபத்திலும் யார் அழகாக இருப்பார்கள்?

கோபம் வருகிறபோது உலக அழகிகள் கூட பொலிவை இழந்துவிடுவார்கள். ஆனால் கோபத்திலும் அழகாக இருப்பவர்கள் குழந்தைகள்.

## எழுத்தாளர் - பத்மா தினேஷ்



இரண்டாம் சனிக்கிழமை, பணியாளர் ஊக்குவிப்பு முகாம் ( மோட்டிவேஷனல் ஸ்பீச்) ஏற்பாடு செய்யபட்டிருந்தது. போக்குவரத்து நெரிசல் இருக்கும் என எண்ணிக் கொஞ்சம் சீக்கிரமாகவே கிளம்பிவிட்டாள். நினைத்த அளவுக்குச் சாலை நெரிசல் இல்லாததால் நாற்பத்தைந்து நிமிடம் முன்பே நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்கு வந்துச் சேர்ந்தாள்.

விழா ஒருங்கிணைப்பாளர்கள் சிலப் பேர் அங்கும் இங்கும் பரபரப்பாகக் காணப்பட்டார்கள். தான் வருவதை பார்த்த அதில் ஒருவர் மரியாதைக்கு வாங்க என கூறி விட்டு, ஏ.. பாருங்க ஆளுங்க வர ஆரம்பிச்சுட்டாங்க, எல்லாம் முடிஞ்சதா என கேட்டுக்கொண்டேச் சென்றார். சற்றுநேரத்தில் அனைவரும் வந்துவிட ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக பேசி கொண்டிருந்தார்கள். திடீரென ஒரு சலசலப்பு, எல்லா கூட்டமும் வாசலை நோக்கித் திரும்பியது.

அவர் தான் சந்தோஷ், இன்றைய சிறப்பு விருந்தாளி. அவரின் பேச்சைக் கேட்கவே பெரும்பாலான கூட்டம் வந்திருப்பதாகத் தெரிந்தது. யூடியூப் பிரபலம் வேறு, சாந்தா யாரிடமும் ஒட்டாமல் தனியாக நின்றிருந்தாள். தன் மேலதிகாரியின் வற்புறுத்தலால் இங்கு வந்திருந்தாள். தேநீர் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது. வாங்க செல்கையில், காலியாய்டுச்சுமா கொஞ்சம் பொறுங்க, வேற பிளாஸ்க் எடுத்து வர்றேன் என்றார், விநியோகிப்பவர்.

பரவாயில்லங்கனுச் சொல்லித் திரும்பும்போது, இன்னொரு கைத் தேநீரை நீட்டியது. இருந்த தலைவலியில் வேண்டாம் என சொல்ல மனம்வரவில்லை. சிறுப் புன்னகையில் நன்றி சொல்லி வாங்கிக் கொண்டாள். பிறகு தான் தெரிந்தது தேநீர்கொடுத்தது சந்தோஷ் என்று.

நல்ல வெயில் இல்ல, என மெதுவாகப் பேச ஆரம்பித்தார் சந்தோஷ். ஆனால் சாந்தாவைப் பற்றிதான் தெரியுமே, சுலபமாக பேசிவிடுவாளா என்ன? அதுக்கென்ன இப்போ? என எறிந்து விழுந்தாள். ஓ! உங்களை ஏதாவது தொந்தரவு செய்திருந்தால் மன்னிச்சுடுங்க, என மென்மையாகக் கூறி விலகினார் அவர். முதல்முறையாகத் தவறாக நடந்துக்கொண்டோமோ, என யோசித்தாள். அம்மாவிடம் இருந்து தொலைப்பேசி அழைப்பு வந்தது.

கூட்டத்தில் சரியாகக் கேட்காதென்பதால் வெளியே வந்தாள். மறுமுனையில் அம்மா, “ பத்திரமாகப் போய் சேர்ந்தியா, என ஆரம்பித்து தங்கையின் மாமியார் வீட்டில் இருந்து அடுத்தவாரம் வரப்போகும் செய்திவரைச் சொல்லிக்கொண்டிருந்தார்.

இருபது நிமிடம் வரைப் பேசிக்கொண்டே வெகுதூரம் நடந்து வந்துவிட்டாள் சாந்தா, அடுத்த நிலைத் தொலைப்பேசி அழைப்புத் தன் மேல் அதிகாரி நாராயணனிடமிருந்து வந்துக் கொண்டிருந்தது.

சரி அம்மா வீட்டுக்கு வந்து மிச்சத்தை பேசிகொள்ளலாம் எனத் துண்டித்து, அடுத்த அழைப்பைத் தொடர்ந்தாள். என்னமா எங்க இருக்க? நிகழ்ச்சி ஆரம்பம் ஆயிடுச்சு, எங்க போன? இதோ பக்கத்துல தான் இருக்கேன், வந்துட்டேன்,
அழைப்புத் துண்டிக்கப்பட்டது. மேல் அதிகாரி என்பதால் எதிர்த்துப் பேசவில்லை. அதுவும் இல்லாமல் அவர் மேல் சாந்தாவிற்குச் சொல்லமுடியாதப் பிரியமோ, மரியாதையோ இருக்கிறது.

அவரை பார்க்கும் போது அடிக்கடி அப்பா நியாபகத்துக்கு வந்து போவார். இவருக்கு என்னதான் ஆசையோ அந்த மேடைப் பேச்சை நான் கேட்க வேண்டும் என்பதில் என நினைத்துக் கொண்டே உள்ளே வந்தாள். நிகழ்ச்சி ஆரம்பமாகி இருந்தது.

பெண்களுக்குத் திமிர் அவசியம், அது தான் அழகும் கூட எனக் காதில் கேட்டது. மேடையைப் பார்த்தாள், சந்தோஷ் தான் பேசிக்கொண்டிருந்தார். அருகில் இருந்த நாற்காலியைப் பற்றி அமர்ந்தாள். அவர் தொடர்ந்தார், ஆம் பெண்களின் திமிர்
நம் கண்களுக்குக் கோபமாகவும், வெறுப்பாகவும் தெரியலாம்.

ஆனால் அது அவர்களின் ஆயுதம், தன் பயத்தை மறைக்கவும், சுயமரியாதையைக் காக்கவும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் ஆயுதம் எப்போதும் ஆபத்து, சரியாகப் பயன்படுத்த தெரியாதபோது நமக்கேப் பாதகமாக மாறும். திமிர் என்கிற ஆயுதத்தை கூர்மையாக வைத்திருப்பதில் தவறில்லை, அதற்கும் ஒரு உரை வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் சரியாகப் பயன்படுத்துங்கள், எப்போதும் பயன்படுத்த அவசியம் இல்லை என கூறி தன் பேச்சை முடித்தார், சந்தோஷ். தன்னையும் அறியாமல் கூட்டத்தோடு கைதட்டிக்கொண்டிருந்தாள் சாந்தா!

சாந்தாவிற்கு, வீட்டிற்கு வந்தும் நிகழ்ச்சி பற்றியும், சந்தோஷின் பேச்சைபற்றியுமான நினைவாகவே இருந்தது. ஏதோ தனக்கே சொன்னதாய் உணந்தாள். “திமிர் என்னும் ஆயுதத்தை தேவையான சந்தர்ப்பத்தில் சரியாக பயன்படுத்துங்கள், எப்போதும் பயன்படுத்த அவசியம் இல்லை” என்னும் வாக்கியம் மட்டும் திரும்பத்திரும்ப மனதில் ஓடிக்கொண்டே இருந்தது...
(தொடரும்)

அன்புடன்,
பத்மா தினேஷ்

**எழுத்தாளர் திருமதி. அனு அசோக்**



ஜெயம் -5

சூர்யாவின் அலுவலக அறையிலிருந்து வெளிவந்த இந்துவை பார்த்துவிட்டு ஹாலில் அமர்ந்திருந்த வாசுகி, “கிளம்பிட்டியாம்மா” கேட்டுக் கொண்டே அவளிடம் வந்தவர்... “போலீஸ் யூனிபோர்மோட இல்லாம சாதாரணமா ஒரு நாள் வீட்டுக்கு வாம்மா... சூர்யா முதல் முறையா ஒரு பெண்ணைப் பற்றி என்கிட்டேப் பெருமையா சொன்னதுன்னா அது உன்னைப் பற்றி தான்...” அன்பானக் குரலில் சொல்ல...

தனது அம்மா சொன்னதைக் கேட்டுக் கொண்டே அங்கே வந்த சூர்யா ‘போச்சுடா! இவள் இதையும் தவறாகத் தானே புரிந்துக் கொள்வாள்.’ இந்துவைப் பற்றிச் சரியாகவேக் கணித்தவன்... பேச்சை மாற்றுவதாக எண்ணி “அம்மா உங்க கிட்ட ஒரு சந்தேகம் கேட்கணும்னு நினைச்சேன்.” என்றுக் குறுக்கிட்டான்.

“என்ன சூர்யா?”

‘நேத்து ஒரு துடைப்பம் வாங்கிட்டு வந்தீங்களே அது எங்கம்மா? புதுத் துடைப்பம் வீட்டை நல்லாப் பெருக்கும்னு’ யாரோ எப்பவோ சொன்னதா நியாபகம்! என்றுக் கேட்டு எரிகிறத் தீயில்.. மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல் இப்படி அனைத்து விதமான எரிப்பொருளையும் ஒன்றாகக் கொட்டினான். அதுப் பக்கென்றுப் பற்றிக்கொண்டுக் கொழுந்துவிட்டு எறிந்து அவனையும் பஸ்பமாக்கிவிடத் துடிதுடித்தது.

“என்னடா சூர்யா! சம்பந்தம் இல்லாம ஏதோ கேட்கிற எனக்கு ஒன்னும் புரியலைப்போ...!” என்று வாசுகி மகனிடம் சொல்லிக்கொண்டிருக்க...

புசுபுசுவென்றுக் கண்களில் பரவத்துவங்கிய கோபத்துடன் சூர்யாவை வெட்டும் பார்வைப் பார்த்தவள், அதற்கு மேல் அங்கே ஒரு நொடி கூட நிற்க விருப்பம் இல்லாதவளாய்...வாசுகியிடம் மட்டும் தலையசைத்து விட்டுக் கிளம்பினாள்.

“சூர்யாவிடம் ஏதோ பேசுவதற்காக வந்த வெங்கட்... இந்துக் கோபமாகச் செல்வதைப் பார்த்துவிட்டு... “என்ன ஆச்சு சூர்யா சார்? மேடம் கோபமா போற மாதிரி தெரியுது” என்றதும்... “உங்க மேடம் உண்மையாவே ரொம்பச் சூடாத் தான் இருக்காங்க நீ இப்போ கிளம்பு அப்புறம் பேசிக்கலாம்....” என்று அவனையும் அனுப்பி வைத்தான் சூர்யா..

ஜீப்பில் வந்து ஏறிய  இந்துவிற்கு வெகு நேரத்திற்குக் கோபத்தின் கொந்தளிப்பு அடங்க மறுத்தது. 'எப்பவும் ரொம்ப நல்லவன் மாதிரியே நடிச்சிட்டு கடைசியா வெருப்பேத்துறதே இவனுக்கு வேலையாப் போச்சு? திமிர் பிடிச்சவன்!  டெவில் டாக்கர்!' மனதிற்குள்  அவனை வசைபாடித் தனது கோபத்தைத் தணிக்கும் முயற்சியில் அவள் ஈடுபட்டிருக்க... அவள் முகத்திலிருந்த கடுகடுப்பிற்கு காரணம் விளங்காத மற்ற மூவரும் எதுவும் பேசாமல் அமைதியாகவே வந்தனர். நகரத் துவங்கியிருந்த ஜீப்பில் எஞ்சின் சத்தத்தைத் தவிர வேற எந்த ஓசையும்  கேட்கவில்லை.
பல நேரங்களில் அவளது அலட்சிய போக்கைப் பொறுத்துப் போகிறவன் தான் சூர்யா... இப்பொழுது கூட உன் நடத்தையை மாற்றிக் கொள் என்றுப் பொறுமையாகத் தான் சொன்னான்... அவன் சொன்னதில் பெரிதாக தவறொன்றும் இல்லை என்பது மூளைக்குப் புரிந்தாலும், அதை எளிதில் ஏற்க மறுக்கும் மனம் அவனிடமே குறைகான  விழைகிறது.
அந்நேரம், அவளது ஐபோனில் கிளிங் என்ற ஓசை குறுந்தகவல் வந்திருப்பதைத் தெரிவிக்கவும், சிந்தை கலைந்து அலைபேசியை கையில் எடுத்துப் பார்த்தாள்.
"குட் ஈவ்னிங் எம்.எல்.ஏ....!" அறிமுகமில்லாத புதிய எண்ணிலிருந்து குறுந்தகவல் வந்திருந்தது. 'யாரிது? கண்களைச்  சுருக்கி ஐபோனின் திரையைப் பார்த்தவள், சில நொடி யோசனைக்கு மேல் அதற்குப் பெரிதாக முக்கியத்துவம் கொடுக்காமல் போனை எடுத்த இடத்தில் வைத்தபோது, கண்ணில் பட்டது அருகிலிருந்த மஞ்சள் வண்ணக் கோப்பு.
கோப்பை எடுத்துப் பிரித்தாள். பார்வை முதல் பக்கத்திலிருந்த அந்த புகைப்படத்தில் சிலநொடிகள் நிலைத்து விட்டன... அழகுடன் அறிவுக் கலையும் சேர்ந்த வசீகர முகம், புகைப்படத்தில் குறும்பு கொப்பளிக்கும் கண்களுடன் சிரித்தபடி நின்றிருந்தாள் ஸ்ரீஷா...
'இந்த இளம் வயதில் இவளுக்கு இப்படி ஒரு கோரம் நேர்ந்திருக்கக் கூடாது' இறக்கத்துடன் எண்ணும் போதே இன்று நடத்திய விசாரணையை தொடர்ந்து மனத்திற்குள் எழுந்த கேள்விகள் அனைத்தும் மீண்டும் ஒருமுறை மூளைக்குள் வலம் வந்தன.
அவளது எண்ண ஓட்டத்தைத் தடை செய்யும் வகையில் சற்று நேரத்திற்குப் பிறகு அதே எண்ணிலிருந்து மீண்டும் ஒரு குறுந்தகவல்... "இன்னைக்கு ஈவ்னிங் ப்ரீயா...? மீட் பண்ணலாமா? எந்தவித அறிமுகமுமின்றி வந்திருந்த அழைப்பில் அவளது புருவங்கள் நெறிப்பட்டன.

'யாரு இந்த போக்கத்த வேலையைப் பண்றது?' கடுப்புடன், அந்த எண்ணிற்கு அழைப்பு விடுக்கச்  சென்றவள், முகம் தெரியாத அந்த நபருடன் கண்ணாமூச்சு  ஆட்டம் ஆடும் பொறுமையற்றவளாகச் சட்டென்று அலைபேசியைச்  சைலென்ட் மோடில் போட்டுவிட்டு “வெங்கட்” என்று உரத்து அழைத்தாள்.
"எஸ் மேடம்...!" டிரைவருக்கு அருகில் அமர்ந்திருந்தவன் அவள் புறமாக திரும்பி அமர்ந்து கேட்டான்.
"ஸ்ரீஷாவை பற்றி உங்களுக்குத் தெரிந்ததை எல்லாம் சொல்லுங்க..." கட்டளையாக உரைத்தவள், அறிவைக் கூர்மையாக்கிப் பார்வையை   வெளியே பதித்தபடி அமர்ந்திருக்க, பின் இருக்கையில் எதிரெதிரே அமர்ந்திருந்த முரளியும், ஜானும் கூட ஆர்வமாக வெங்கட்டை கவனிக்க துவங்கினர்.
"சூர்யா சார், அப்பா கைலாஷ் ஓட லெதர் பேக்டரியில தான் எங்க அப்பா மேனேஜரா வேலை பார்த்தார் மேடம்... அவருக்கு லெதர் பேக்டரி மட்டும் இல்லாம ஹைதராபாத்ல ஷிப்பிங் கார்ப்பரேஷன் கூட இருந்ததா எங்க அப்பா சொல்லிருக்கார். ரெண்டு பிஸ்னஸையும் தனியாளாப் பார்க்க முடியாமத் தான் கூட ரெண்டு பார்ட்னர்ஸ் வச்சிருந்தார். சென்னைல இருந்த பேக்டரி நல்லா தான் ரன் ஆகிட்டு இருந்தது... உங்களுக்கே தெரியும் லெதர் பேக்டரில வாட்டர் யூசேஜ் அதிகமா இருக்கும்னு. பேக்டரியில இருந்து வர வேஸ்ட்டேஜினால புதுசா வந்த ரெஸிடென்சியல் ஏரியாவில் பாதிப்பு வருதுன்னு பிரச்சனை ஆரம்பித்தது..
அந்த பிரச்சனை கொஞ்சம் கொஞ்சமா பெரிதாகி கடைசியா பேக்டரியையே இழுத்து மூடுற நிலைமைக்கு வந்துடுச்சு... கைலாஷ் சாரும் பேக்டரியை இடம் மாத்துறதுக்கு எவ்ளவோ ட்ரை பண்ணார்... அதுக்கு அவரோட ரெண்டு பார்ட்னர்ஸும் ஒத்துக்கலை.... அவங்களோடப் பங்கைப் பிரிச்சுக் குடுக்கச் சொல்லிப் பிரச்சனை பண்ணாங்க... அதுமட்டும் இல்லாம இதுவரைக்கும் பேக்டரி நல்லபடியா ரன் ஆனதுக்கு அவங்க ரெண்டு பேரோட உழைப்பு மட்டும் தான் காரணம்னு சொல்லி லாபத்துல பெரும் பங்கை வாங்கிட்டு போயிட்டாங்க. இதெல்லாம் எங்க அப்பாச் சொல்லித் தான் தெரிஞ்சிக்கிட்டேன்.

அப்போ நான் சின்னப் பையன். நான், சூர்யா சார், ஸ்ரீஷா, எல்லாம் ஒரே ஸ்கூல்ல தான் படிச்சிட்டு இருந்தோம். ஸ்ரீஷாவுக்கும் எனக்கும் ஒரு வயசு தான் வித்யாசம்னாலும் என்னை அண்ணான்னு தான் கூப்பிடும் மேடம். ரொம்ப நல்லப் பொண்ணு! அந்த சின்ன வயசுலையே ஹெல்பிங் டெண்டன்சி அதிகம். ஆனால், மத்தப் பெண் குழந்தைகளைப் போல தான் உண்டு தன் வேலை உண்டுன்னு இருக்க தெரியாது." பழைய நினைவுகளை அசைப் போட்டபடிச் சொன்னவன், தொடர்ந்து... "அவங்க குடும்பத்தோட ஹைதராபாத் போனதுக்கு பிறகு அவங்க யாரையும் பார்க்கிற சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கல. டிகிரி முடிச்சிட்டு போலீஸ் ட்ரைனிங்ல ஜாயின் பண்ண போது தான் ஸ்ரீஷாவை டெல்லியில பார்த்தேன்... அங்க ஹாஸ்டல்ல தங்கி M.B.A படிக்கிறதா தெரிஞ்சிக்கிட்டேன்... அதுக்கு அப்புறம் மூணு வருஷம் கழிச்சு சென்னையிலையே ஒரு சிக்னல்ல பார்த்தேன். இங்கயே சாப்ட்வேர் கம்பெனி ஆரம்பிச்சிருக்கிறதா சொல்லி என்கிட்ட விசிட்டிங் கார்டை குடுத்து கம்பெனிக்கு வந்து பார்க்க சொன்னிச்சு... நானும் போய் பார்த்தேன். அப்போ தான் ராம்சரணும், ஸ்ரீஷாவும் லவ் மரேஜ் பண்ணிக்கிட்டது, அவங்களுக்கு ஒருப் பெண் குழந்தை இருப்பது எனக்குத் தெரிந்தது... கைலாஷ் கன்சர்ன்னு அவங்க அப்பாப் பேர்லயே கம்பெனியும் இருந்ததைப் பார்த்து எனக்கு ரொம்பப் பெருமையா இருந்தது மேடம்...! அதுவும் ஸ்ரீஷாவோட வளர்ச்சியை நேரடியா பார்த்ததுல சந்தோசமாப் பேசிட்டு இருந்துட்டு வந்தேன். அதுக்கு அப்புறம் ஸ்ரீஷாவை நான் பார்க்கவே இல்லை. அந்த விபத்தை பற்றிப் பேப்பர்ல தான் படிச்சேன்... ரொம்ப ஷாக்கிங்கா இருந்தது. அந்த கேஸை ஏ.ஸி செல்லப்பாத் தான் இன்வெஸ்ட்டிக்கேட் பன்றாருன்னு தெரியவந்ததும் அவர்கிட்ட இருந்து அந்த ஆக்ஸிடென்ட்டை பற்றி எதாவது தெரிஞ்சிக்க முடியுமான்னு ட்ரை பண்ணேன். உனக்கு சம்பந்தம் இல்லாத கேஸ்ல நீ எதுக்கு மூக்கை நுழைக்கிற, என்கொயரி முடிந்து ரிப்போர்ட் சப்மிட் பண்ண பிறகு நியூஸ் பேப்பர்ல வரும் அப்போ தெரிஞ்சிச்கோன்னு கோபமாப் பேசி என்னை அனுப்பிட்டார்." உணர்வுகளை வெளிக்காட்டாமல் கடமைத் தன்மையுடனே சொல்லி முடித்து ஒரு நிதானமான சுவாசத்தை வெளியிட்டான் வெங்கட்...

அவன் சொன்னதை ஒன்று விடாமல் உள்வாங்கிக் கொண்ட இந்துவின் அறிவும், மனமும் விரைந்துக் கொண்டிருந்த வாகனத்தின் வேகத்திற்கு ஏற்ப அதிவேகமாக இயங்கிக் கொண்டிருந்தது.
முதலில் பெரிதாக ஆர்வம் இல்லாமல் தான் இந்த வழக்கில் ஈடுபட்டாள். ஆனால், கடந்த இரண்டு நாட்களிலே ஸ்ரீஷா விபத்தை குறித்தப் பரபரப்பான தேடல் அவளுக்குள் தொடங்கி விட்டிருந்தது. அதுவும் முதற்கட்ட விசாரணைக்குப் பிறகு அந்த விபத்திற்குப் பின்னால் ஏதோ மர்மம் அடங்கி இருக்கின்றது என்பதையும் உள்ளுணர்வால் உணர ஆரம்பித்திருந்தாள். தற்பொழுது அந்த மர்மத்தை அறிந்துக் கொள்ளும் உத்வேகமும், உந்துதலும் புற்றீசல் போல அவளது மூளைக்குள் பலவிதமான சந்தேகங்களைக் கிளப்பிக் கொண்டிருக்க... ஆழ்மனம் அதற்கான விடைகளைத் தேடும் தீவிரமான முயற்சியில் இறங்கிக் இருந்தது.

அன்றுக் காலை சரியாகப் பதினோரு மணிக்கு கைலாஷ் கன்சர்ன் என்ற அந்த பிரம்மாண்டமான அடுக்குமாடி கட்டிடத்திற்குள் நுழைந்தது. இந்துவின் எஸ். யூ. வி. வாகனங்கள் நிறுத்துமிடத்தில் காரை நிறுத்திவிட்டு அவள் இறங்கி நடக்க... அவளுக்கு முன்பே தங்களது இருசக்கர வாகனத்தில் அந்த இடத்தை அடைந்திருந்த மற்ற மூவரும் ஒவ்வொருவராக அவளுடன் வந்து இணைந்து கொண்டனர். அலவலகத்தைச் சுற்றிலும் பார்வையைச் சுழல விட்டபடி தனதுக் குழுவினருடன் நடந்தவள், பச்சைப் புல்வெளி தோட்டத்தைக் கடந்து நுழைவாயிலை அடைந்ததும், பிரதமர் அலுவலகத்தை போல மூலைக்கு ஒருவராக நின்றிருந்த செக்யூரிட்டி கார்ட்ஸ் காக்கிச்சட்டை அணியாமல் மஃப்டியில் வந்திருந்த நால்வரிடமும் சோதனைகளை மேற்கொண்டனர்.
சோதனைகள் முடித்து உள்ளே நுழைந்ததும் ஆண்கள் மூவரும் அவளுடன் ஒரு பார்வை பரிமாற்றத்துடன் திசைக்கு ஒருவராக பிரிந்து செல்ல... மின்விளக்குகளின் பளீர் வெளிச்சத்தில், கண்ணாடி தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்த தனித்தனி கேபின்களில், ஆண்களும் பெண்களும் கணினியின் முன்னால் அமர்ந்து வேலை செய்வதை பார்த்து கொண்டே, நேராக ரிசப்ஷனில் நின்றிருந்த பெண்ணிடம் சென்ற இந்து, "உங்க எம்.டி ராம்சரணை பார்க்கணும்..." என்றாள் எடுத்த எடுப்பிலே...

போனில் பேசிக் கொண்டே  அவள் புறமாக திரும்பிய அந்தப்பெண், டார்க் ப்ளூ ஜீன்ஸ், பியர் கிரீன் போர்மல் டாப்ஸ், ரிம்லெஸ் ஷீல்ட் சன்கிளாஸ் என்று நவநாகரீகமான தோற்றத்தில் காணப்பட்டவளிடம் ஒரு ஆபீசருக்கு குரிய கம்பீரத்தை கண்டதும் போனின் ஸ்பீக்கர் பகுதியை ஒரு கரத்தால் பொத்திக்கொண்டே... "அப்பாயின்மென்ட் வாங்கிருக்கீங்களா மேம்?" இனிமையான குரலில் கேட்க...

அவள்  இல்லை என்றதும், "எம்.டி ஸார், ஜி.எம் கூட மீட்டிங்கில இருக்கார்... இப்போ அவரை  பார்க்க முடியாது. நீங்க யாருன்னு சொன்னா மீட்டிங் முடிந்ததும் அவர்கிட்ட சொல்றேன்..." என்றாள் புன்னகை மாறா முகத்துடன்.

இந்து  எதுவும் பேசாமல் ஐ. டி கார்டை எடுத்து அவள் முன்னால் நீட்ட... அதை பார்த்ததும் அந்தப் பெண்ணின் முகத்தில் ஒரு இன்ஸ்டன்ட் மரியாதையும், பரபரப்பும் வந்தமர்ந்து கொண்டது.

"சாரி மேம்! நீங்க வெயிட் பண்ண தேவை இல்லை. இப்பவே எம்.டியை பார்க்கலாம். நேரா போயி லெஃபிட்ல திரும்பினா எம்.டி ரூம்..." மிகப்பணிவாக கூரியவளிடம் "தேங்க்ஸ்..." என சொல்லிவிட்டு நடந்தாள்.

இரண்டு நிமிட நடை பயணத்தில் ரிசப்ஷனிஸ்ட் குறிப்பிட்ட அறைவாயிலை அடைந்து... கதவை தட்ட செல்லும் போது தான் அது திறந்தே இருப்பது தெரிந்தது. கொஞ்சமே கொஞ்சம் திறந்திருந்த கதவின் கைப்பிடியில் கரத்தை வைத்து பாதி தள்ளிக்கொண்டு முன்னே ஒரு அடி வைத்தவள், அறைக்குள் ஒரு ஆணும், பெண்ணும் நெருக்கமாக இருக்கும் காட்சியை கண்டு திகைத்தாள்.

நொடிப்பொழுதில் திகைப்பிலிருந்து மீண்டிருந்தவளுக்கு முதுகை காட்டி நின்றிருந்த ஆணின் உருவம் முன்னால் இருந்த பெண்ணை மறைத்திருந்தபடியால், இருவரின் முகங்களையுமே சரியாக பார்க்க முடியவில்லை. இருந்தாலும், அவர்களிடம் தெரிந்த அன்யோன்யத்தை மனம் குறித்துக் கொண்டு விட்டிருந்தது. மேலும் அங்கே தாமதிக்கும் உத்தேசமின்றி வந்தே சுவடே தெரியாமல் பின்னுக்கு சென்று கதவையும் பழைய நிலையிலே வைத்துவிட்டு வாயிலில் நின்றபடியே கதவை தட்டினாள்.

சிலபல நொடிகள் கடந்த பிறகே "கம்மின்" உள்ளிருந்து கணீரென்று ஒரு ஆண்குரல் கேட்டது. முகத்தில் எந்தவித மாறுதலும் இல்லாமல் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றவள், முதலில் கண்டது அங்கே நின்றிருந்த ப்ரீத்தியை தான். அவள் முகத்திலும் இந்துவை கண்ட மாத்திரம் அதிர்ச்சி. இந்துவை அந்த நேரத்தில் எதிர்ப்பார்க்கவில்லை என்ற உணர்வு அவளது கண்களில் அப்பட்டமாக தெரிந்தது.
ப்ரீத்தியின் முகத்தில் தனது திடீர் வருகையில் உண்டான பதட்டத்தையும் மீறி ஒரு கலக்கம் விரவியிருப்பதை கவனித்துக் கொண்டே "ஹலோ" என்ற இந்துவிற்கு பதில் சொல்ல முடியாத திணறலுடன் அவளது பார்வை எதிரே இருந்தவனிடம் செல்ல... நிர்வாக இயக்குனரின் இருக்கையில் அமர்ந்திருந்தவனும் இப்படிப்பட்ட நேரத்தில் எவருடைய குறுக்கீட்டையும் எதிர்பார்க்க வில்லை தான் போல... ஆனால், சமயோசிதத்துடன் உணர்வுகளை மறைக்கத் தெரிந்தவனாக இருந்தான். ப்ரீத்தியிடம் கண்டன பார்வை ஒன்றை செலுத்திவிட்டு 'யார் இவள்?' என்ற கேள்விக் குறியுடன் இந்துவை பார்க்க...
"ஹலோ, மிஸ்டர் ராம்சரண்! உங்களை பார்க்க தான் ஒன்வீக்கா ட்ரை பண்றேன். உங்களை பிடிக்கவே முடியலை..."
சொல்லிக்கொண்டே அவனது அனுமதிக்கு காத்திராமல் அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தவளை யோசனையாக பார்த்தவன், "நீங்க எதுக்காக என்னை பார்க்கணும்? ஹூ ஆர் யூ...?" அதிகாரத்துடன் கேட்பதற்கும் அந்நேரம் அவன் கைபேசி இசைப்பதற்கும் சரியாக இருந்தது.
"எக்ஸ்க்யூஸ் மீ" என்றுவிட்டு அவன் அதை எடுத்ததும் "சார்! உங்களை பார்க்க சென்னை டி.ஸி.பி வந்திருக்காங்க. உங்க ரூமிற்கு அனுப்பிருக்கேன். அதை சொல்லத்தான் ரொம்ப நேரமா எக்ஸ்டென்ஷனுக்கு ட்ரை பண்ணிட்டு இருக்கேன் ரிங் போயிட்டே இருந்தது நீங்க எடுக்கலை... அதனால தான் உங்க பெர்சனல் நம்பருக்கு கூப்பிட்டேன்." ரிசப்ஷனிஸ்ட் மூச்சிவிடாமல் பேச அவனுக்குள் திடுக்கென்றது. அடுத்த நொடியே சமாளித்துக் கொண்டவனின் பார்வை டேபிளில் இருந்த போனிற்கு செல்ல, அது சரியாக வைக்கப்படாமல் இருக்கவும் "இட்ஸ் ஓகே... நான் பார்த்துக்கிறேன்..." அழைப்பை துண்டித்துவிட்டு யோசனை தாங்கிய முகத்துடன் போனின் ஹான்செட்டை சரியாக வைத்தவன், இந்துவை பார்த்து சட்டென புன்னகைத்தான்.

"இப்போதான் ரிசப்ஷனிஸ்ட் சொன்னாங்க நீங்க சென்னை சிட்டியோட டி. ஸி.பின்னு. சொல்லுங்க என்ன விஷயமா என்னை பார்க்க வந்தீங்க?"
அதற்குள் தன்னிலைக்கு வந்திருந்த ப்ரீத்தி, "சரண்! நம்ம ஶ்ரீஷா கேஸை இவங்க தான் இன்வஸ்டிக்கேட் பண்றாங்க..." அவசரமாக சொன்னதும், சரணின் முகம் ஒரு நொடி கருத்து பின் இயல்பிற்கு வந்ததை கவனித்தாள் இந்து, அறைக்குள் வந்ததிலிருந்தே இருவரின் அங்க அசைவுகளையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தவளுக்கு இருவரிடமும் ஏதோ தவறு ஒளிந்திருப்பதை போன்ற உணர்வு ஆட்கொண்டதில், அவளது கடமை உள்ளம் நிமிர்ந்து உட்கார்ந்தது.
"எஸ் மிஸ்டர் சரண்! உங்க வைஃப்வோட ஆக்ஸிடென்ட் விஷயமா தான் உங்ககிட்ட என்கொயரி பண்ணிட்டு போகலாம்னு வந்தேன்..." சாதாரணமாக சொல்லிவிட்டு அவன் முகபாவனையில் இருந்து வேறு எதையாவது தெரிந்து கொள்ள முடியுமா? என்று ஆராய்ந்தாள்.
"நீங்களே ஆக்ஸிடென்ட்ன்னு தான் சொல்றீங்க... இதுக்கு மேலே என்கொயரி பண்றதுக்கு என்ன இருக்கு... தவிற என் வைஃப்க்கு நடந்த ஆக்ஸிடென்ட் பற்றி உங்க கிட்ட கம்ப்ளெயின்ட் எதுவும் குடுத்ததா எனக்கு நியாபகம் இல்லையே..." அழுத்தமான சுவாசம் ஒன்றை வெளியிட்டு அலட்சியம் போல காட்டி பதில் சொன்னவனுக்குள் எச்சரிக்கை குரல் ஒன்று ஒலிக்கத் துவங்கி இருந்ததென்னவோ உண்மை.
"நீங்க கொடுக்கலை... ஆனா, உங்க வைஃப்வோட பிரதர் சூர்யப்பிரகாஷ் கொடுத்து இருக்கார்..."
"ஓ...!" என்று சில நொடிகள் மௌனம் காத்தவன், "அவருக்கு சந்தேகம் இருக்கலாம்? ஆனா, எனக்கு என் மனைவிக்கு நடந்த ஆக்ஸிடென்ட் பற்றி எந்த சந்தேகமும் இல்லை... சோ, இது சம்பந்தமா நீங்க என் கம்பெனிக்கு வருவதையோ... என்கொயரிங்கிற பேர்ல என்னையும், என் எம்ப்ளாயீஸையும் டிஸ்டப் பண்றதையோ நான் விரும்பல... நீங்க கிளம்புறீங்களா? என்றான் பட்டென்று.

இந்துவா இதெற்கெல்லாம் அசருபவள். இருக்கையிலிருந்து நிதானமாக எழுந்து தன் இரு முழங்கைகளையும் மேஜையின் மேல் ஊன்றிக்கொண்டு "நீங்களும், ஸ்ரீஷாவும் லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டீங்கன்னு கேள்விப்பட்டேன்... ஆனா, நீங்க பேசுறதை பார்த்தா அப்படி தெரியலையே...?" வேண்டுமென்றே சிரித்துக்கொண்டு சொன்னவள், "இப்ப கூட நான் உங்களை அரெஸ்ட் பண்ணி கூட்டிட்டு போயி என்கொயரி பண்றதை யாராலும் தடுக்க முடியாது மிஸ்டர் ராம்சரண்...! இருந்தாலும், இப்ப போறேன் ஆனால், திரும்ப வருவேன்..." என்றதோடு அவளும் அதற்கு மேல் அங்கே நிற்கவில்லை.
அவள் வெளியே வந்த சிறிது நேரத்திற்கு எல்லாம் முரளியும், ஜானும் அவளை நோக்கி வேகமாக வந்தனர். போன காரியம் என்னவானது என்று அவள் அவர்களிடம் விசாரிக்க...
"இங்க வொர்க் பண்ற யாரும் எதுக்கும் சரியா பதில் சொல்ல மாட்றாங்க மேடம்...! ரொம்ப திமிரா பேசுறாங்க...! இவங்களுக்கு எல்லாம் போலீஸ் ட்ரீட்மெண்ட்டுன்னா என்னன்னு காட்டினா தான் சரிப்பட்டு வரும்... ம்ம்ன்னு ஒரு வார்த்தை சொல்லுங்க நாங்க பார்த்துக்கிறோம்" வழக்கம் போல ஆர்வம் மிகுதியில் படபடவேன்று பேசினான் ஜான்.
"சந்தேகத்தின் பேரில் அப்படி எத்தனை பேரை அரெஸ்ட் பண்ணி உள்ள வச்சு விசாரிப்பீங் ஜான். சரியான ஆதாரம் இல்லாம அப்படி எல்லாம் பண்ண முடியாது. இதை கூட தெரிஞ்சுக்காம நீங்க எல்லாம் எப்படி தான் சப் இன்ஸ்பெக்டர் ஆனீங்களோ? முதல் எல்லாத்துக்கும் இப்படி உணர்ச்சி வசப்பட்ட பேசுறதை குறைச்சுக்கங்க... நீங்க கத்துக்க வேண்டியது இன்னும் நிறைய இருக்கு..." குரலில் தேவையான அழுத்தத்தை கொடுத்து இந்து இதை சொன்னதும்...
"சாரி மேடம்! இனிமேல் இப்படி நடந்துக்க மாட்டேன்..." தனது அதிகப்பிரசங்கி தனத்தை உணர்ந்து உடனே மன்னிப்பு கேட்டான் ஜான்...
"இட்ஸ் ஓகே..." என்றுவிட்டு அவள் முரளியிடம் கவனத்தை திருப்ப, "ஜான், சொல்றது சரி தான் மேடம்... இங்கிருக்கிற எம்ப்ளாயீஸ் எல்லாம் எதுக்கோ கட்டுப்பட்டிருக்க மாதிரி தான் தெரியுது... .

அதுவும் அவங்க கம்பெனி சேர்மனை பற்றி பேசுறதுக்கே ரொம்ப யோசிக்கிறாங்க... அதையும் மீறி நாங்க தெரிஞ்சிகிட்டது என்னன்னா கொஞ்ச நாளாவே ஹஸ்பெண்ட் அண்ட் வைஃப்க்குள்ள ஏதோ பிரச்சனை இருந்திருக்கு... அதுவும், அந்த ஆக்ஸிடென்ட் நடந்தப்போ சரண் சென்னையிலையே இல்லைன்னு  அங்கிருந்த செக்யூரிட்டி சொல்றார். சம்திங் பிஷி... செல்லப்பா இந்த கேஸ்ல நிறைய மிஸ் பண்ணிருக்கிறதா தோணுது மேடம்...! ராம்சரண் மேலயும்  ஒரு  டவுட்  வருது... நீங்க அனுமதி கொடுத்தா இப்பவே அவரோட ஆக்டிவிட்டீஸ க்ளோஸா வாட்ச் பண்றோம்"  தனது யூகத்தை பகிர்ந்து கொண்டு உத்தரவிற்காக காத்திருந்தான்.

முரளி சொன்னவற்றை ஆராய்ந்தவள், முகத்தில் பலத்த சிந்தனைகள். தனது சிந்தனைக்கு தற்காலிகமாக அணையிட்டு, "ராம்சரணனோட ஆக்டிவிட்டீஸை  சர்வைலன்ஸ்  பண்றதுக்கு நான் வேற ஏற்பாடு பண்றேன்... நீங்க ரெண்டு பேரும் இன்னைக்கே கொடைக்கானல் கிளம்புங்க. அங்க ஸ்ரீஷா தங்கியிருந்த ஹோட்டல், ஆக்ஸிடென்ட் ஸ்பாட் இதெல்லாத்தையும் பத்தி நெக்ஸ்ட் வீக் எனக்கு கிளியர் ரிப்போர்ட் வேணும். நான் ஆரம்பத்துல சொன்ன மாதிரி கேஸ் டிடைல்ஸ் எதுவும் லீக் அவுட் ஆக கூடாது. கவனமா இருங்க"  இருவரையும் எச்சரித்து விட்டு தனது கருப்பு வண்ண எஸ்.யூ.வியில் அங்கிருந்து கிளம்பினாள்.

பெருங்குடியிலிருந்து புறப்பட்ட அவளது வாகனம் நேராக வீட்டிற்கோ அலுவலகத்திற்கோ செல்லாமல் ஈஸ்ட் கோஸ்ட் சாலையில் இணைந்து வேகமெடுத்தது. ஸ்ரீஷாவின் வழக்கை பற்றி அவளுக்கு நிறைய யோசிக்க வேண்டியிருந்தது. அதற்கு யாருடைய தலையீடும் இல்லாத அமைதியான மனநிலை தேவை என்பதால், போக்குவரத்து அதிகம் இல்லாத அந்த நண்பகல் நேரத்தில் சிந்தனையுடனே சீரான வேகத்தில் காரை செலுத்திக் கொண்டிருந்தாள்.

ஈஞ்சம்பாக்கத்தை அடுத்துள்ள வி.ஜி.பி கோல்டன் பீச்சை கடந்து சென்று கொண்டிருந்த கார் மேலும் ஒரு பதினைந்து நிமிடம் பயணப்பட்டிருக்கும். வழியில் தென்பட்ட பஸ் நிறுத்தம் ஒன்றில் தனியாக ஒரு பெண் நின்றுகொண்டிருக்க, அவளுக்கு வெகு அருகில் இரண்டு இளைஞர்கள் நின்றிருந்தது சற்று வித்தியாசமாக தோன்றவும், அவர்களை கடந்து ஒரு நூறு மீட்டர் சென்ற இந்துவின் கார் சட்டென்று ஸ்டியரிங்கைச் சுழற்றி யூ டேர்ன் அடித்து பஸ் நிறுத்தத்தின் ஓரமாய் வந்து நின்றது.
அவள் எண்ணியது போல அங்கிருந்த சூழல் சரியில்லை... இளைஞர்கள் இருவரும் அங்கே நின்றிருந்த பெண்ணை பற்றி தங்களுக்குள் ஏதோ கேலி பேசிச் சிரிப்பதையும் அந்தப்பெண் அவர்களை கோபமுகத்தோடு முறைப்பதையும் கீழிறக்கப்பட்ட பிரன்ட் டோர் கண்ணாடி வழியாக கவனித்தாள். ஆண்களின் ரோமம் மழிக்கப்படாத முகமும், செம்பட்டை தலையும், அவர்களது இளிப்பிற்கு இடையே தெரிந்த கறைபடிந்த பற்களையும் வைத்து இருவரும் லோக்கல் ரௌடிகள் என்பதை கண்டு கொண்ட போதிலும் சற்றே பொறுமையாக இருந்தாள் இந்து...இருவரில் நெடியவனாக இருந்த ஒருவன் இப்பொழுது அந்த பெண்ணை நெருங்கி "இவ்ளோ நேரம் ஒருத்தவன் கூட உட்கார்ந்து படம் பார்த்தியே...! எங்க கூடயும் உட்கார்ந்து ஒரு ஷோ பார்த்துட்டு போன்னு தானே டார்லிங் கூப்பிடுறோம்" நக்கல் சிரிப்புடன் அவளது கன்னத்தை தடவ செல்ல, முகச்சுளிப்புடன் பட்டென்று அவனது கரத்தை தட்டி விட்டாள் அந்தப்பெண்.
"இதப்பாருடா மாரி! பாப்பா முரண்டு பிடிக்குது. உனக்கு படம் பார்க்க புடிக்கலைன்னா சொல்லு டார்லிங் ஸ்ட்ரைட்டா லாட்ஜிக்கே போயி...." மேலும் ஏதோ ஆபாசமாக சொல்லிக்கொண்டே அவளை நெருங்கியவனை கண்டு மிரண்ட போனவள், அங்கிருந்து அகன்று விட முயற்சிக்கவும் அதை முன்கூட்டியே யூகித்திருந்த ரௌடியின் முரட்டுக்கரம் அவளை நகர விடாமல் இறுக்கமாக பற்றிக்கொண்டது. அவன் செய்கையில் திகைத்து, கலவர விழிகளுடன் உதவிக்கு யாரும் வருவார்களா? என்று சுற்றிலும் பார்த்துக்கொண்டே "கையை விடுடா, இல்லை சத்தம் போட்டு ஊரை கூட்டுவேன்" பயம் கலந்த தைரியத்துடன் அவனை மிரட்டினாள்.

"கூப்பிடு எவன் வரான்னு நாங்களும் பார்க்கிறோம். இந்த ஏரியாவில எங்களை எதிர்க்க  எவன் இருக்கான்னு நாங்களும் தெரிஞ்சிக்கணும் இல்ல..." அவன் தெனாவெட்டாக கூற, அதுவரை அங்கே நடப்பவற்றிற்கு  பார்வையாளர மட்டுமே இருந்த இந்து, காரிலிருந்து இறங்கி...
"என்ன இங்க பிரச்சனை?" அந்த பெண்ணிடம்  சென்று கேட்டாள். ரௌடியின் பேச்சிலும், செய்கையிலும் விளைந்த கலக்கத்துடன் அவளை ஏறிட்ட அந்தப்பெண் "நான் பஸ் ஸ்டாப்ல தனியா நிக்கிறதை பார்த்துட்டு கலாட்டா பண்றாங்க மேடம்!" அழுகை முட்டிக் கொண்டிருந்த விழிகளுடன் அவளிடம் முறையிடவும்...
"என்னங்கடா! தனியா நிக்கிற பொண்ணு கிட்ட கலாட்ட பண்ணினா நீங்க  எல்லாம் பெரிய ரௌடியா? மரியாதையா இப்போ அந்த பொண்ணு கையை விடுறியா, இல்லை வாழ்நாள் முழுக்க ஒரு கையோட இருக்க போறியா?"  இந்து நிதானமாக கேட்க... "இத்தோட! நியாயத்தை தட்டி கேட்க அக்கா வந்திருக்காங்க...! அப்படியே எங்களுக்கு பயந்து பயந்து வருது... இந்தப்பாரு, நீ பெரிய கார்ல வந்து இறங்கினா நாங்க உனக்கு பயப்படனுமா? ஒழுங்கா இங்கிருந்து போயிடு... இல்லைன்னா நீயும் எங்க கூட படத்துக்கு வா... என்னடா? ரெண்டு பேர் இருக்கமே ஒரு கிராக்கி தான் சிக்கிருக்குன்னு நினைச்சேன்... நீயும் வந்தின்னா கணக்கு சரியா போயிடும்... என்னடா சொல்ற மாரி...! பார்ட்டி படு ஷோக்கா இருக்குதுல்ல...!" அவனது சகாவிடம் அபிப்பிராயம் கேட்க திரும்பியவன், தலை திரும்பிய படியே இருக்க வாங்கிய அறையில் பொறிகலங்கி போய் பொத்தென்று ரோட்டில் விழுந்து கிடந்தான்.
அதுவரை, இந்துவையே உற்று பார்த்திருந்த மற்றவன் ரோட்டில் கிடந்தவனிடம் ஓடிச்சென்று "அண்ணாத்தே நம்ம மாலிக் அண்ணனை கஞ்சா கேஸ்ல உள்ள புடிச்சு போட்ட போலீஸ் பொம்பளை இவ தான் அண்ணாத்தே... வா இங்கிருந்து ஓடிருவோம்..." சொல்லிக்கொண்டே அவனது கரத்தை பிடித்து இழுத்தான். அண்ணாத்தையாகப் பட்டவனுக்கு எழுந்து கொள்ளும் திராணி இருந்தால் தானே?

அவன் அரைமயக்கத்தில் அப்படியே கிடக்கவும், திகைத்தவன், சட்டென்று  இடுப்பில் சொருகியிருந்த பிளேடை எடுத்துக் கொண்டு "ஏய்!" இந்துவின் மேல் பாயமுற்படவும், அசரமாமல், பூட்ஸ் காலை அவன் நெஞ்சில் வைத்து வேகத்துடன் எத்தி தள்ளினாள்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் மின்னல் வேக தாக்குதலில் இருவரையும் அவள்  சரமாரியாக அடித்து துவைத்தெடுக்க... அங்கே கூட்டம் சேர்ந்து விட்டது. ரௌடிகள் இருவரும் உடம்பு முழுக்க ஊமை காயங்களுடன் நினைவிழந்து மண்ணில் உருண்டு கிடப்பதை மக்கள் கூட்டம் நின்று வேடிக்கை பார்த்திருக்க...

"என்ன இங்க கூட்டம்? எல்லாம் கலைந்து போங்க..." கிட்டத்தட்ட உறுமியவள். அந்த ஏரியா காவல்நிலையத்தை தொடர்பு கொண்டு அவர்களை அங்கே வர சொல்லிவிட்டு அந்த பெண்ணிடம் திரும்ப, அவள் ஓரமாக நின்று அழுது கொண்டிருந்தாள். இப்பொழுது, அவளது கரத்தை பற்றி, ஆறுதல் சொல்லிக் கொண்டு ஒரு இளைஞனும் அவளுடன் நின்றிருந்தான்.

இருவரையும் அவள் அருகே அழைக்க... கண்களில் படர்ந்திருந்த மிரட்சியுடன் வந்து நின்றார்கள். ஊடுருவும் பார்வையால் அவர்களை ஆராய்ந்து கொண்டே "யாரிது?" அந்தப்பெண்ணிடம் கேட்டாள்.

"என்னோட பாய் பிரிண்ட் மேடம்! ரெண்டு பேரும் கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்க போறோம்..." மெலிதான நடுக்கத்துடன் சொன்னாள் அந்தப்பெண்.

"எங்கிருந்து வரீங்க?"

"மாயாஜாலுக்கு படம் பார்க்கிறதுக்காக வந்தோம்... தியேட்டர்ல எங்களுக்கு பின்னாடி உக்காந்து படம் பார்த்திட்டு இருந்த ரௌடிங்க தான் இவங்க..." நடந்திருந்த சம்பவங்களில் மிகவும் பயந்திருந்தவளின் குரல் தழுதழுக்க, அவள் சொல்லி முடிப்பதற்கு முன் “ர்ரப்...” அந்த இளைஞனின் கன்னத்தை பதம் பார்த்திருந்த இந்துவின் கரம்.

வாங்கிய அறையில் சர்வ அவயங்களும் ஒடுங்கப்பெற்று வெலவெலத்துப் போனவனிடம் "கல்யாணம் பண்ணிக்க போற பொண்ணை வெளியில கூட்டிட்டு வந்தா பாதுக்காப்பா கூடவே இருந்து கூட்டிட்டு போகணும்கிற அறிவு இல்லையா உனக்கு?" அவள் உஷ்ணமாக வெடிக்க...
"சா...சாரி மேடம்...! மாயாஜாலில் இருந்து வந்திட்டு இருக்கும் போதே பாதி வழியில பைக் பஞ்சர் ஆகிடுச்சு... பகல் வேளைதானேன்னு தான் இவளை இங்க நிழல்ல நிக்க சொல்லிட்டு பஞ்சர் ஒட்டிறதுக்கு மெக்கானிக் ஷெட்டுக்கு போயிருந்தேன்..." வரவிருந்த ஆபத்தை உணர்ந்திருந்ததால் கன்னத்தை பற்றிக் கொண்டே வருத்தத்துடன் கூறினான்.
அவன் முகத்தை சில நொடிகள் கூர்ந்து பார்த்து உண்மை சொல்கிறான் என்பதை புரிந்து கொண்டவள், "டே டைம்ல  எந்த தப்பும் நடக்காதுன்னு தைரியமா? உங்களை மட்டும் சொல்லி குற்றம் இல்ல... இப்படி பப்ளிக் அஜாக்கிரதையா இருக்கிறது தான் சிட்டியில கிரைம் ரேட் அதிகரிக்க காரணம். எங்க வேலை பார்க்கிறீங்க...?"
"பக்கத்துல இருக்கிற ஐ. டி கம்பெனியில தான் வேலை செய்றோம் மேடம்...!" இருவரின் அடையாள அட்டையையும் எடுத்து காட்டினான் அந்த இளைஞன்.
அதைவாங்கி பார்த்துக்கொண்டே "இன்னும் கொஞ்ச நேரத்துல இந்த ஏரியா இன்ஸ்பெக்டர் இங்க வந்திடுவார். அவர் கூட ஸ்டேஷனுக்கு போய் ஒரு கம்ப்ளெயின்ட் எழுதி குடுத்திட்டு கிளம்புங்க..." என்றதும்.
"ஸ்டேஷனுக்கு எல்லாம் வேண்டாம் மேடம்...! நாங்க ரெண்டு பேருமே டீசென்ட்டான பாமிலி. எங்களுக்கு இப்போ தான் எங்கேஜ்மென்ட் முடிந்தது... எங்க வீட்டுக்கு விஷயம் தெரிஞ்சா ரொம்ப பயந்துடுவாங்க மேடம்...! ப்ளீஸ்! எங்களை இப்படியே விட்டுருங்க" பீதியுடன் கைகூப்பி இறைஞ்சினான்.
க்கே இன்னொரு பொண்ணுகிட்ட வம்பு பண்ணுவானுங்க ராஸ்கல்ஸ்..." கடிபட்ட பற்களுக்கிடையே அவள் கர்ஜிக்க...

அந்த இளைஞனின் பார்வை தன்னை மீறி கீழே கிடந்தவர்களிடம் சென்றது 'இன்னொரு பெண்ணிடமா! இனிமேல் பெண்கள் இருக்கும் பக்கம் கூட ரெண்டு பேரும் திரும்ப மாட்டானுங்க' மனத்திற்குள் நினைத்தவன், "சரிங்க மேடம்! நீங்க சொன்ன மாதிரி கம்ப்ளெயின்ட் குடுத்திட்டே போறோம்..." என்றான் பவ்யமாக.
சற்று நேரத்தில் அந்த ஏரியா இன்ஸ்பெக்டர் அங்கு வந்து சேரவும்... அவரிடம் அந்த ரௌடிகளை ஒப்படைத்து, சொன்னது போல அந்த பெண்ணிற்கு எந்த வித பிரச்சனையும் ஏற்படாத வகையில் கம்ப்ளெயின்ட்டை மட்டும் எழுதி வாங்கி கொண்டு அவர்களை அனுப்பும்படி அவள் கூறியதும், அவள் மேல் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கும் அந்த மூத்த அதிகாரி இந்துவின் வார்த்தைக்கு மறுவார்த்தையின்றி அவள் சொன்னதை கேட்டுக் கொண்டார்.
மீண்டும் கார் நிற்கும் இடம் வந்தவள்... இவையனைத்தையும் சற்று தூரத்திலிருந்து இரண்டு விழிகள் சுவாரஸ்யத்துடன் கவனித்துக் கொண்டிருந்ததை கவனிக்க தவறி விட்டாள்.


**தொடரும்** :-


## பழமொழி

## செல்வி - அமான்டா லினேட் பிரின்ஸ்



சேர இருந்தால் செடியும் பகை
பொருள்:
எப்போதும் பிறருடன் அளவாகப் பழக வேண்டும். யாருடனும் அதிக நெருக்கத்துடன் இருந்தால் அங்கே பகை உண்டாவதற்கு வாய்ப்புகள் அதிகம்.







**செல்வன் - ஹர்ஷிவ் எல்லப்பா சந்திரா ஸ்ரீதர்**

## அ - வரிசைச் சொற்கள்







**செல்வி - யாழிசை சந்திரா ஸ்ரீதர்**



**செல்வி - அவந்திகா செலுக்க தினேஷ்**



**செல்வி - அம்ரிதா செலுக்க தினேஷ்**






**செல்வி-நாடியா பாரதி**







**செல்வி - கனிஷ்கா சுகுமாறன்**

## திருமதி - அம்பிகா அருண்பிரசாத்





படித்ததில் பிடித்தது...


ஒருவர் உன்னை
தாழ்த்திப்
பேசும் போது
ஊமையாய் இரு...

புகழ்ந்து பேசும்
போது செவிடனாய்
இரு...

எளிதில் வெற்றி பெறுவாய்!

– அம்பிகா அருண்பிரசாத்


## அறுசுவை






**செல்வன் - ஜெகன் அருண்பிரசாத்**

## பசு என்ன கொடுக்கும்?






**செல்வி - ஆதிரா அருண்பிரசாத்**

# Best Wishes From

Culture & Cuisine

An Authentic Experience

**Home Style South Indian Catering,Training and Events**

**Revathy Sukumaran**

**+1(720)362-0873**

**revathys@cultureandcuisinellc.com**

**www.cultureandcuisinellc.com**

**Follow us on**

**@cultureandcuisinellc**